

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி புனித தோமையார் மலை ஒன்றியம் திரிசூலம் ஊராட்சியில் மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் இ. கருணாநிதி எம்.எல்.ஏ நேரில் சென்று கிராம சபை கூட்டத்தில் பொதுமக்கள் சாலை மழை நீர் கால்வாய் பணி உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு உடனடியாக பணிகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளிடம் கேட்டுக் கொண்டார். இதில் எம். மாரிமுத்து மன்ற உறுப்பினர்கள் கழக நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# “அன்னம் தரும் அமுத கரங்கள் திட்டம்”!

## 15.10.25 முதல் 26.10.25 வரை நடைபெறும் இடங்களின் விவரம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

**சென்னை,அக்.15-**

**“அன்னம் தரும் அமுத கரங்கள்” கீழ்கண்ட நாட்களில் நடைபெறும் விவரம் பின்வருமாறு:**



**நாள் 15.10.25 புதன்கிழமை 238 ஆம்நாள்**

**வில்லிவாக்கம் மேற்குபகுதி**

1) வட்டம் 94 ஆ,ராஜமங்களம், ரெட்ஹில்ஸ் ரோடு,வட்டசெயலாளர்க. சுகுமாரன்

2) வட்டம் 94 அ,பலராமபுரம்,வட்டசெயலாளர் ஆர். தீனதயாளன்.

**நாள் 16.10.25 வியாழக்கிழமை 239 ஆம் நாள்**

**அம்பத்தூர்வடக்குபகுதி**

1) வட்டம் 79,லக்ஷ்மி அம்மன்நகர்,பூங்காஅருகில்,ஒரகடம்,அம்பத்தூர் வட்டசெயலாளர்வே. ரவிந்திரன்

2) வட்டம் 79 அ,ஏரிக்கரைசாலை,வெங்கடேஸ்வர் நகர்,அம்பத்தூர் வட்டசெயலாளர்பு. வீரா (எ) வீரராகவன்

**நாள் 17.10.25 வெள்ளிக்கிழமை 240 ஆம்நாள்**

**எழும்பூர்தெற்குபகுதி**

1) வட்டம் 61,எழும்பூர் மகப்பேறுமருத்துவமனை,பாண்டியன்சாலை வட்டசெயலாளர் டால்ஃபின்S. ஹரி

2) வட்டம் 61 அ,சின்ன குழந்தைதெரு,வரதராஜபுரம்,புதுப்பேட்டைஆல் பர்ட்திரையரங்கம்எதிரில்,குடிசைபகுதி,வட்டசெயலாளர்E.மொய்தீன்

**நாள் 18.10.25 சனிக்கிழமை 241 ஆம்நாள்**

**கொளத்தூர்கிழக்குபகுதி**

1) வட்டம்67அ, கென்னடிஸ்கொயர்,திருவள்ளூர் தெரு,வட்டசெயலாளர்K. ஜார்ஜ்குமார்

2) வட்டம் 66அ, அய்யாலுதெரு,வெற்றிநகர்,வட்ட செயலாளர் P. ஊமைத்துரை

**நாள் 19.10.25 ஞாயிற்றுக்கிழமை 242 ஆம்நாள்**

**எழும்பூர்வடக்குபகுதி**

1) வட்டம் 77 அ,மோதிலால்தெரு,புளியந்தோப்பு,வட்டசெயலாளர்வி. அபாய்

2) வட்டம் 78அ,அஷ்டபுஜம்ரோடு,சூளை,வட்ட செயலாளர்ந.பாலு

**நாள் 20.10.25 திங்கட்கிழமை 243ஆம் நாள்**

**திருவி.கநகர்வடக்குபகுதி**

1) வட்டம் 74 அ,சந்தர யோகிசமாதிசாலை,வட்டக்கழகஅலுவலகம்அருகில் பெரம்பூர்,வட்டசெயலாளர் G. கிருஷ்ணகுமார்

2) வட்டம் 71,ஜட்ஜ்பரமசிவம்தெரு, பெரம்பூர் வட்டசெயலாளர்பரிமளா சுரேஷ்குமார்

**நாள் 21.10.25 செவ்வாய்க்கிழமை 244ஆம்நாள்**

**அம்பத்தூர்தெற்குபகுதி**

1) வட்டம் 90, 606 அரசு குடியிருப்புஅருகில்,வட்டச் செயலாளர்நா. நெப்போலியன்

2) வட்டம் 93,பாரி சாலை,புகழேந்திசாலைசந்திப்பு,முகப்பேர், வட்டசெயலாளர், இரா. டீக்கா

**நாள் 22.10.24 புதன்கிழமை 245 வதுநாள்**

**1) துறைமுகம்மேற்குபகுதி**

1) வட்டம் 54அ, பி. கே.ஜி.கார்டன், வால்டாக்ஸ் ரோடு, வட்ட செயலாளர் பா.கதிரவன்

2) துறைமுகம்கிழக்கு பகுதி

வட்டம் 60, 4வதுகடற்கரைசாலைகோபால்செட்டிதெருசந்திப்பு, வட்டசெயலாளர், க.கவியரசு.

**நாள் 23.10.25 வியாழக்கிழமை 246 ஆம் நாள்**

**வில்லிவாக்கம்கிழக்குபகுதி**

1) வட்டம் 97,பெரியார் சாலை,வெள்ளாளதெரு (அன்னைதெரேசாஆட்டோநிறுத்தம்) வட்டசெயளாளர்விக்னேஷ்சீனிவாசன்

2) வட்டம் 97 அ,சாலை அம்மன்கோயில்தெரு,முத்தம்மன்கோயில்தெரு, வட்டசெயலாளர்ச. மனோகரன்

**நாள் 24.10.25 வெள்ளிக்கிழமை 247 ஆம்நாள்**

**அம்பத்தூர்கிழக்குபகுதி**

1) கொரட்டூர் பேருந்துநிலையம் அருகில், வட்ட செயலாளர் மூ.விஜயகுமார்

2) வட்டம் 84 ஆ, தொடர் வண்டி சாலை, பெரியார் நகர், கொரட்டூர். வட்ட செயலாளர் த.வலால்.

**நாள் 25.10.25 சனிக்கிழமை 248ஆம்நாள்**

**திரு.வி.கநகர்தெற்கு பகுதி**

1) வட்டம் 75,செங்கல்வராயன்தெரு,ராமலிங்கபுரம்,வட்டசெயலாளர்வி. வெங்கடேசன்

2) வட்டம் 75 அ,சின்ன பாபுதெரு,நம்மாழ்வார் பேட்டை, மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் ஜி.சுரேஷ்கோபி

**நாள் 26.10.25 ஞாயிற்றுக்கிழமை 249 ஆம்நாள்**

**துறைமுகம் மேற்கு பகுதி**

1) வட்டம் 54 ஆ, உட்வார்ப் 3வது கேட், வால்டாக்ஸ் ரோடு, வட்ட செயலாளர்ஆர்.ரவிச்சந்திரன்

**துறைமுகம் கிழக்கு பகுதி**

2) வட்டம் 60அ, அன்னைசத்யாநகர், ஏ.பி.பகுதி, வட்டசெயலாளர்ஆ. நா.பார்த்திபன்.

மேற்கண்ட காலை உணவு வழங்கும் நிகழ்ச்சியில் திட்ட ஒருங்கிணைப்பாளர்களாக சொ.வேலு, S.முரளி, R. ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்குமார், L. சம்பத்குமார், க.பா.பிரதீப் குமார் செயல்படுவார்கள்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே. சேகர்பாபு அறிவித்துள்ளார்.

---

### புதுக்கோட்டை வடக்கு மாவட்டம்

## பூதக்குடி ஊராட்சி மாற்றியமைப்பு!

### தலைமைக் கழகம் அறிவிப்பு!

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம், விராலிமலை மத்திய ஒன்றியத்தில் உள்ள “பூதக்குடி ஊராட்சி” இனி, விராலி மலை மேற்கு ஒன்றியத்தில் தொடர்ந்து செயல்படும்.

**“அண்ணா அறிவாலயம்”** **துரைமுருகன்**
சென்னை- 600 018. பொதுச்செயலாளர்,
நாள்: 14.10.2025. தி.மு.க.

---

### இராயபுரம் – திரு.வி.க நகர் மண்டலங்களில்

## 1 இலட்சத்து 2 ஆயிரம் மெட்ரிக் டன் குப்பைகள் அகற்றம்

### சென்னை மாநகராட்சி தகவல்!

சென்னை,அக்.15-

பெருநகர சென்னை மாநகராட்சியில் சாலைகள், தெருக்கள், கடற்கரைகள், பேருந்து நிறுத்தங்கள், பாலங்கள், பூங்காக்கள், மயான பூமிகள், பொது இடங்கள் உள்ளிட்ட அனைத்துப் பகுதிகளிலும் தினசரி சராசரியாக 6,500 மெட்ரிக் டன் குப்பைகளை அகற்றி திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன . மேலும், நாள்தோறும் சராசரியாக 1000 மெட்ரிக் டன் கட்டடக் கழிவுகள் அகற்றப்பட்டு வருகின்றன.

இதில், இராயபுரம் மண்டலம் (மண்டலம்5) திரு.வி.க. நகர் மண்டலம் (மண்டலம்6) ஆகிய இரண்டு மண்டலங்களில் அனைத்துப் பகுதிகளிலும் கடந்த 19.07.2025 முதல் 11.10.2025 வரையிலான நாட்களில் மண்டலம்5ல் 62.224 மெட்ரிக் டன், மண்டலம்6ல் 39478 மெட்ரிக் டன் என மொத்தம் 1. 02 இலட்சம் மெட்ரிக் டன் குப்பைகளை அகற்றி கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன.

மண்டலம்5 மற்றும் மண்டலம் 6ல் வீடு வீடாகச் சென்று குப்பைகளை சேகரிக்கும் பணிக்காக 800 மின்கல வாகனங்கள், குப்பைகள் சேகரிப்பதற்காக

5 டன் கொள்ளளவில் 9 டிப்பர் லாரிகள், 8 கனமீட்டர் கொள்ளளவில் 36 காம்பாக்டர் வாகனங்கள், 14 கனமீட்டர் கொள்ளளவில் 28 காம்பாக்டர் வாகனங்கள்,

18 கனமீட்டர் கொள்ளளவில் 4 காம்பாக்டர் வாகனங்கள், 250 டாட்டா ஏஸ் வாகனங்கள், 12 கனரக வாகனங்கள், 6 ஜேசிபி இயந்திரங்கள் என மொத்தம்

1145 வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த இரண்டு மண்டலங்களிலும் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை சுழற்சி முறையில் கண்காணித்திட உரிய அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டு, அவர்களது கண்காணிப்பில் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



திருவள்ளூர் மத்திய மாவட்ட திருவள்ளூர் மேற்கு ஒன்றியம் காக்களூர் ஊராட்சியில் தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்டம் உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் உத்தரவுக்கிணங்க ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ ஆலோசனை படி நடைபெற்றது. இதில் ஒன்றிய செயலாளர் ஆர்.ஜெயசீலன் ஏற்பாட்டில் தூய்மை பணியாளர்களுக்கு கோட் சூட் அணிவித்து நலத்திட்ட உதவிகள் வழங்கி கௌரவித்தார் உடன் கே.கே.சொக்கலிங்கம், டி.கே.சீனிவாசன், எஸ்.சௌந்தரராஜன், பிரபு, சங்கர், டி.சதீஷ், சிவாபிரகாஷ், விக்கி, சேது, சரண்,கிருஷ்ணன், தாமஸ், விக்ரம், கார்த்திக்,மாதவன், உள்பட பலர் உள்ளனர்.



வடசென்னை மாவட்டம்,எர்ணாவூர் பஸ் நிறுத்த ஆட்டோ ஸ்டாண்ட் விழாவில் ஸ்ரீ பில்டர்ஸ் உரிமையாளரும் காந்திநகர் செயலாளரும் திருவொற்றியூர் மேற்குப் பகுதி தி.மு.க.வைச் சேர்ந்தவருமான டாக்டர் அப்பு என்கிற சிவராமன் கலந்துகொண்டு ஆட்டோ ஓட்டுநர்களுக்கு நல திட்ட உதவிகள் வழங்கி அனைவருக்கும் அறுசுவை உணவு வழங்கினார். உடன் தேவராஜ், சிவக்குமார், விக்கி,காந்தி, சரத் ,ராஜேஷ், கார்த்தி மற்றும் பொதுமக்கள் ஆட்டோ சங்க நிர்வாகிகள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

---

### ஒன்றிய பா.ஜ.க. அரசு இந்திய அரசியல் சட்டத்தை சீர்குலைத்தால்

# இந்தியா சிதறுண்டுபோகும் என்பதற்கான எச்சரிக்கை, ஒலிக்கத் தொடங்கிவிட்டது!

**பொன். முத்துராமலிங்கம்**
முன்னாள் அமைச்சர்,
கழக உயர்நிலை செயல்
திட்டக்குழு உறுப்பினர்



இந்த ஆண்டு (1925) RSS அமைப்பின் நூற்றாண்டு விழா நிகழ்ச்சி புதன்கிழமை அன்று டெல்லியில் கொண்டாடப்பட்டது. இந்த விழா நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக பிரதமர் நரேந்திரமோடி கலந்துகொண்டு RSS அமைப்பின் நூற்றாண்டு நிகழ்வினை நினைவுகூரும் வகையில் நூறு ரூபாய்க்கான நாணயத்தையும், அஞ்சல் தலையையும் வெளியிட்டுள்ளார்கள். RSS இயக்கத்தினுடைய தலைவர்கள் இந்த நிகழ்ச்சியில் மோகன் பகவத் மற்றும் முன்னாள் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் உள்ளிட்டோர் கலந்து கொண்ட நிகழ்ச்சியில்தான் பிரதமர் நாணயத்தை வெளியிட்டுள்ளார்கள்.

இந்தியா ஆங்கிலேயர்களிடமிருந்து விடுதலைப் பெற்ற பின்னர், இந்தியாவிற்கான அரசியல் அமைப்புச் சட்டம் (Constitution of India) பாபாசாகிப் டாக்டர். அம்பேத்கர் தலைமையில் உருவாக்கப்பட்டது. இந்தியா பல்வேறு தேசிய இனங்களை உள்ளடக்கிய துணைக்கண்டம் என்பதுதான் வரலாற்று ஆசிரியர்களின் தீர்க்கமான முடிவாகும்.

எனவே, இங்கு வாழும் மொழி, இனம், பண்பாடு ஆகியவற்றால் வேறுபட்ட தேசிய இனங்களை ஒன்றுப்படுத்தி, ஒரே ஆட்சிக் கட்டமைப்பில் உருவாக்கிட வேண்டுமெனில், இந்திய ஆட்சி முறை என்பது, மதச்சார்பற்ற ஆட்சி முறையாகவும், கூட்டாட்சி முறையாகவும் (Federation) இருக்க வேண்டும் என்பதுதான் அனைத்து தேசிய தலைவர்களின் உறுதியானதும், தீர்க்கமானது மான முடிவாகும்.

இந்தியத் துணைக்கண்டம் முழுமையும் ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் பொங்கியெழுந்த உணர்ச்சியின் வெளிப்பாடாகத்தான் இந்தியத் துணைக் கண்டம் ஆங்கிலேயரின் ஆட்சியிலிருந்து விடுபட்டது என்பது கடந்தகால விடுதலைப் போராட்ட வீரவரலாறு.

எனவே, அந்நியர்களை அப்புறப்படுத்துவதற்கு அணிதிரண்ட அனைத்துத் தேசிய இனங்களையும் ஒன்றுபடுத்தி, ஒரே ஆட்சிக் கட்டமைப்பில் உருவாக்கிடவேண்டும் என்ற ஆழ்ந்த, தொலை நோக்கு சிந்தனையை அடிப்படைக் கட்டமைப்பாகக் கொண்டுதான் இந்திய அரசியல் சட்டம் (Constitution of India) உருவாக்கப்பட்டது.

இந்திய அரசியல் சட்டத்தின் அடிப்படைக் கட்டமைப்புகளில் ஒரு அம்சம் தான் மதச்சார்பற்றதன்மை யாகும் (Secularism). மதச்சார்பற்ற அடிப்படைக் கட்டமைப்புகளின் மூலம் தான் வேற்றுமையில் ஒற்றுமை காண முடியும் (Unity in Diversity) என்ற தேசிய தலைவர்களின் நம்பிக்கை செயல் வடிவம் பெற்றது. மொழி, இனம், மதம் ஆகியவற்றால் வேறுபட்ட தேசிய இனங்களின் ஒற்றுமைக்கு மதச்சார்பற்ற கோட்பாடு ஒன்றுதான் இணைப்புப் பாலமாக தொடர்ந்து வேறுபாடின்றி இந்திய சமூகத்தையும், மாநிலங்களையும் ஒற்றுமைப்படுத்தும் வலிமையான சக்தியாக தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை அனைத்துத் தரப்பு விபரம் அறிந்த மக்கள் நன்றாகவே அறிவார்கள்.

பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான ஒன்றிய அரசு “ராஷ்ட்ரிய சுயம்சே வக்சங்” (RSS) என்ற மதவாத அமைப்பின் கொள்கையான “இந்துத்துவா” கோட்பாட்டின் அடிப்படையில் “இந்துராஷ்ட்ரத்தை” உருவாக்கும் முயற்சியின் தொடக்கமாகவும், தொடர்ச்சியாகவும் இந்திய வரலாற்றின் நிகழ்வுகளையும், நிகழ்ச்சிகளையும் “இந்துராஷ்ட்ரா” கோட்பாட்டிற்கு ஏற்புடையதாகவும், முன்மாதிரியாகவும் கட்டமைக்கும் நோக்கில் கடந்தகால வரலாற்றின் போக்கை மாற்றியமைக்கும் முயற்சியின் முன்னெடுப்பாகக் குழுக்களை உருவாக்கி, அறிக்கைகளை பெற்றிடும் முயற்சி தொடர்ந்து திட்டமிட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை சமீபத்தில் மேற்கு வங்கத்தைச் சார்ந்த மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நிலோத்பால்பாசு அவர்கள் மதுரை அமெரிக்கன் கல்லூரி வளாகத்தில் கல்லூரி ஆசிரியர்கள் சங்கத்தின் சார்பாக (MUTA) உரையாற்றுகின்றபொழுது, இந்த கருத்தை தெரிவித்திருக்கிறார்.

(Prime Minister Narendra Modi also took steps to formulate committees to reshape the Indian history to adhere to the Hindutva Organisations narratives. Another dangerous move by the current government was to reconfigure the education system and policies according to the market demands ‘The Hindu’ dated 12.10.2025)

மேலும் இன்றைய கல்வித்திட்டத்தை உலகச்சந்தைகளின் தேவைக்கேற்ப மாற்றி புதியக் கல்வித் திட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். இந்த புதியக் கல்வித் திட்டம் மிக மோசமான விளைவுகளை உருவாக்கும் என நிலோத்பால்பாசு எச்சரிக்கிறார். நிலோத்பால்பாசு அவர்கள் தெரிவித்த கருத்தின் முன்மாதிரியாக, மாண்புமிகு தமிழ் நாட்டினுடைய முதல்வர் அவர்கள் ஒன்றிய அரசினுடைய புதியக் கல்விக்கொள்கையை ஏற்றுக்கொள்ள இயலாது என ஏற்கனவே தெளிவுபட ஒன்றிய அரசிற்கு அறிவித்துள்ளார்கள். இதன் காரணமாக, தமிழ்நாட்டுக்கு வழங்க வேண்டிய கல்வி தொடர்பான நிதியினை ஒன்றிய அரசு நிறுத்தி வைத்திருக்கிறது என்பது நாடறிந்த செய்தியாகும்.

எனவே, தமிழ்நாட்டினுடைய முதல்வர் அனைவருக்கும் கல்வி என்ற திராவிடமாடல் ஆட்சியின் இலட்சியத்திற்கு ஒன்றிய அரசினுடைய புதியக் கல்விக்கொள்கை தடைக்கல்லாக இருக்கும் என்பதை முன்கூட்டியே தொலைநோக்குடன் ஆய்வுசெய்து, புதியக் கல்விக்கொள்கையை ஏற்கமாட்டோம் எனப் பிரகடனப்படுத்தியப் பெருமையும், புகழும் தமிழ் நாட்டு முதல்வரையே சாரும் என்பதை இந்த கட்டுரையின் மூலம் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

1991 ஆம் ஆண்டு உலகமயம், தாராளமயம், தனியார் மயம் (Globalisation, Privatisation, Liberalisation) என்ற கொள்கைப் பிரகடனத்தை ஒன்றிய பாஜக அரசு தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, இந்துதுவா கோட்பாட்டின் பொருளாதாரச் சிந்தனைகளின் அடிப்படையில் தங்களுக்கு சாதகமான முதலீட்டாளர்களைப் பயன்படுத்தி, நம்பிக்கையில்லாத நகைப்பிற்கு இலக்காகும் (Crony) முதலாளித்துவர் கட்டமைப்பை உருவாக்கிக் கொண்டிருக்கிறது என்பதை மேற்குவங்க நாடாளுமன்ற உறுப்பினர் நிலோத்பால்பாசு அவர்கள், தன்னுடைய உரையிலே சுட்டிக்காட்டியிருக்கிறார்.

(Though the 1991 liberalism policies opened up new avenues and opportunities to the India’s economy, the recent developments in the economic policies are enabling the crony capitalists to shape the economy according to their needs ‘The Hindu’ dated 12.10.2025)

இந்த கருத்தாக்கத்தின் முன்னோடியாக திராவிட மாடல் ஆட்சியின் பிதாமகன் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள், தான் முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன் “எல்லோருக்கும் எல்லாம்” என்ற சமதர்மக் கருத்தை தன்னுடைய அரசுப் பின்பற்றும் என பிரகடனப்படுத்தியதோடு, அந்தக் கொள்கையைத் தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறார். தமிழ்நாட்டிற்கு உள்நாட்டிலும், வெளிநாட்டிலுமிருந்து முதலீடுகளை ஈர்ப்பதிலும், தொழிற்சாலைகளை உருவாக்குவதிலும், அதன் மூலம் இருபால் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தருவதிலும் எந்த அளவு தொடர்முயற்சியினை மேற்கொண்டிருக்கிறார் என்பதிலும் கடந்த நாலரை ஆண்டு காலமாக தமிழ்நாட்டு மக்கள் எந்த அளவிற்கு பயனடைந்து கொண்டிருக்கிறார்கள் என்பதற்கான விளக்கம் தேவையில்லை என்றே கருதுகிறேன்.

திராவிட மாடல் ஆட்சியின் முதல்வர் தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்ப்பதும், தொழிற்சாலைகளை உருவாக்குவதும் தமிழ்நாட்டினுடைய வளத்தை பெருக்குவதற்கும், தனிநபர் வருமானத்தை உயர்த்துவதற்கும், இருபால் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்குமான அடிப்படையில்தான் இருக்கும்.

ஆனால், ஒன்றிய அரசினுடைய திட்டங்கள் அனைத்தும் தங்களுக்கு சாதகமான முதலீட்டாளர்களையும், தொழிலதிபர்களையும் ஊக்குவித்து, தங்களின் “இந்துராஷ்ட்ரா” கோட்பாட்டைப் பலப்படுத்துவதுதான் அவர்களுடைய ஒரே நோக்கம் என்பதை பாரதிய ஜனதா கட்சியின் பத்தாண்டுகால ஆட்சி நிரூபித்துக்காட்டியிருக்கிறது. இதைத்தான் நிலோத்பால்பாசு அவர்கள் தன்னுடைய உரையிலேயே தெளிவாகச் சுட்டிக்காட்டுகி றார்.

இப்படி ஒன்றிய அரசு இந்திய அரசியல் சட்டத்திற்கு முரண்பாடாக திரைமறைவில் சட்டங்களையும், திட்டங்களையும் திட்டமிட்டு உருவாக்கிக் கொண்டிருக்கிறது என்பதை யாராலும் மறுக்கவியலாது.

பாபாசாகிப் டாக்டர்.அம்பேத்காரால் உருவாக்கப்பட்ட இந்திய அரசியல் சட்டம் (Constitution of India) இந்தியத் துணைக் கண்டத்தினுடைய எதார்த்த நிலைமைகளை ஆழமாக ஆய்வு செய்து “வேற்றுமையில் ஒற்றுமை” (Unity in Diversity) என்ற லட்சிய முடிவிற்கு வடிவம் கொடுத்து நீண்ட விவாதத்திற்குப் பின்னர், உருவாக்கப்பட்டதுதான் இந்திய அரசியலமைப்புச் சட்டம்.

எனவேதான், கன்னியாகுமரியிலிருந்து காஷ்மீர் வரையிலும் உள்ள பல்வேறு தேசிய இனங்களும் இந்திய அரசியல் சட்டத்தை ஏற்றுக்கொண்டு, இந்திய நாட்டின் ஒற்றுமையை தொடர்ந்து உறுதியுடன் பாதுகாத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த உணர்வுக்கும், நாடுதழுவிய இந்த உணர்ச்சிக்கும் தீங்கிழைக்காமல், ஒன்றிய பா.ஜ.க அரசு செயல்பட வேண்டும் என்பது அனைத்து மக்களின் எதிர்பார்ப்பாகும்.

இந்தக் கருத்தைத்தான் இந்திய உச்ச நீதி மன்றத்தின் தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் அவர்கள் மராட்டிய மாநிலத்தில் உள்ள புதிய நீதிமன்ற வளாகத்தைத் திறந்து வைத்து உரையாற்றுகின்ற பொழுது, நம் நாடு ஒற்றுமையாக இருப்பதற்கு அம்பேத்காரால் உருவாக்கப்பட்ட இந்திய அரசியல் சட்டம்தான் மூலக்காரணம் என்பதை தீர்க்கமாக சுட்டிக்காட்டியுள்ளார்கள். இந்திய உச்சநீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதியினுடைய இந்த எச்சரிக்கை உரிய காலகட்டத்தில் கொடுக்கப்பட்ட சரியான எச்சரிக்கையாகத்தான் நாட்டு மக்கள் கருதுகிறார்கள்.

ஒன்றிய பா.ஜ.க அரசு “இந்துத்துவா கோட்பாட்டை” வழிமொழியக்கூடிய அரசியல் சட்டமாக இந்திய அரசியல் சட்டத்தை மாற்றிட முயற்சிக்கிறார்கள் என்பது கற்பனை வாதமல்ல. மாறாக, யாராலும் மறுக்கவியலாத உண்மை. எனவேதான், இந்திய உச்ச நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதி ஆம்! இந்திய அரசியல் சட்டத்தினுடைய பாதுகாவலர் (Guardian) என்ற முறையில் தன் உரையில் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஒன்றிய அரசு திருந்துமா அல்லது மக்கள் அந்த கட்சியையும், அந்தக் கட்சிக்கு முட்டுக்கொடுக்கின்ற மாநிலக் கட்சிகளையும் புறக்கணிக்க வேண்டுமா என்ற கேள்விக்கு விடைகாணும் தேர்தலாக வருகின்ற தமிழக 2026 சட்டமன்றத் தேர்தல் அமையும். அதில், பாரதிய ஜனதா கட்சிக்கும் அந்தக் கட்சியின் கூட்டாளிகளுக்கும் மக்கள் சக்தி சரியான பாடம் புகட்டும் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை.